கடல்சார் மற்றும் வான்சேவை தகவல்கள் மற்றும் ஆய்வு (தனியார்) கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாகஇலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பினியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனி தொடர்ந்திருத்தல்

கம்பனி 2012 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றுள்ளமை, நிறுவனம் தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தவறியமை, நிறுவனம் விளைவற்றுக் காணப்பட்டமை மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்காமை போன்ற காரணங்களைக் காண்பித்து துறைமுகங்கள் மற்றும் கடல்சார் அமைச்சரால்

சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பை கவனத்தில்கொண்டு 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதி கம்பனியைக் கலைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் கம்பனியின் தொடர்ந்திருத்தல் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் கணக்குகளின் குறிப்பு 2.2 இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றனது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை கடல்சார் மற்றும் வான்சேவை தகவல்கள் மற்றும் ஆய்வுகள் (தனியார்) கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 10 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுத் தொகுதியில் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 26,000,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 25,852,754 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 147,246 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட முதலீடு, வைப்புக் கணக்கு, திரண்ட நிதியக் கணக்கு எனடபவறடறழனட மீதிகளை அதற்குரிய பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 312,000 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டியவைகள் என கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 930,355 தொகையான நிறுத்தி வைத்தல் வரி மீதி மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்த போதும் அதற்கான முறையான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 செப்தெம்பர் 14 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், வரைவு வருடாந்த அறிக்கை 2017 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பகுதி | 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி கம்பனியைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதாகவும், கலைத்தல் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதாகவும் கம்பனியின் பதிவாளருக்கு அறிவித்தது தவிர பின்வரும் தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (I) கம்பனிச் சட்டத்தின் 319(1)(அ) பிரிவு | சுயமாக கணக்குகளைத் தீர்த்து மூடிவிடுவதற்குரிய விஷேட முன்மொழிவினை அங்கீகரித்தல். |
| (II) கம்பனிச் சட்டத்தின் 330(1) ஆம் பிரிவு | உரிய விஷேட முன்மொழிவை அங்கீகரித்து வர்த்தமானியில் பிரசுரித்து அறிவித்தல். |
| (III) கம்பனிச் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவு | கலைப்பாளரின் நியமனம் தொடர்பான அறிவித்தலொன்று வர்த்தமானியில் பிரசுரித்து பதிவு செய்வதற்காக கம்பனிப் பதிவாளருக்கு கையளித்தல் |
| (IV) கம்பனிச் சட்டத்தின் 330(1) மற்றும் 331 ஆம் பிரிவுகள் | பொதுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தல், இறுதிக் கூட்டத்தைக் கூட்டுதல், கணக்குகளைத் தீர்த்து மூடிவிடுதல் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் (3)(1) உபபிரிவுகளின் பிரகாரம் வாரமொன்றிற்குள் பதிவாளருக்கு அறிவித்தல். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 505,475 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,439,557 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னயை ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 934,082 இனால் அதாவது 65 சதவீத்தால் குறைவடைந்திருந்தது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் இன்மையினால் தாபன மற்றும் நிர்வாகச் செலவினங்கள் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட நட்டம் குறைவடைந்தமைக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012/2013 நிதியாண்டு முதல் மீளாய்வாண்டு வரை கம்பனி தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தது. 2016 ஆகஸ்ட் மாதத்தின் போது கம்பனியை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையின் காரணமாக ஊழியர் ஊதியம் தவிர ஏனைய நிர்வாகச் செலவினங்கள் வரையறுக்கப்பட்டமையால் 2015/2016 ஆம் ஆண்டின் போது மறைப் பெறுமதியாகக் காணப்பட்ட பங்களிப்பு 2016/2017 ஆம் கணக்காண்டின் போது ரூபா 1,055,951 வரை அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நட்டம் ரூபா 6.68 மில்லியனாக இருந்ததுடன் அது வெளியிடப்பட்ட மூலதனமான ரூபா 30 மில்லியனுக்கு சீராக்கப்பட்டதன் பின்னர் ரூபா 23.32 மில்லியன் வரை 22 சதவீதத்தால் மூலதனம் தாக்கமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடல் மற்றும் வான் சேவைகள் தொடர்பான தகவல்கள் மற்றும் இறக்குமதி, ஏற்றுமதி செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல், காலப்பகுப்பாய்வு செய்தல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அது சார்ந்த தொழில் முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் மதியுரை சார்ந்த சேவைகளை வழங்குதல் போன்றவை கம்பனியின் பிரதான நோக்கமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், கம்பனியால் நிறைவேற்றுவதற்கு எவ்வித செயற்பாட்டு பணிகளும் பலவருட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனி 2014 ஆம் ஆண்டின் பின்னர் எவ்வித பணிகளையும் மேற்கொள்ளாதிருந்ததுடன் குறித்த எதிர்காலத் திட்டமும் இன்றி செயற்பாடற்றுக் காணப்பட்டது. 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருந்தும் அந்த பணிப்பாளர் சபை மீளாய்வாண்டில் ஒரு தடவையாவது கூட்டப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. எனினும், கம்பனியின் விளைவற்ற பதவியணியின் 04 அங்கத்தவர்களுக்காக சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்கு ஆண்டின் போது ரூபா 1,549,949 தொகை செலவிடப்பட்டிருந்தது. கம்பனி சம்பளம் செலுத்துதல் உள்ளடங்கலாக தாபன மற்றும் நிர்வாகச் செலவினங்களைச் செய்வதற்காக வங்கி மேலதிகப்பற்றைப் பயன்படுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வங்கி மேலதிகப் பற்று ரூபா 2,371,079 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் கம்பனி விளைவற்ற செலவினங்களைச் செய்தமை தவிர வேறெந்த செயலாற்றலையும் பெற்றிருக்கவில்லை.

## 4.2 பதவியிணியினர் நிர்வாகம்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறித்த பணிப்பொறுப்பின்றி மேலதின பதவியணியினர் இருக்கும் போது கம்பனியால் 2016 மார்ச் 03 ஆந் திகதி முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு ஒப்பந்த அடிப்படையில் புதிய பெண் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2017 மார்ச் 31 வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 422,066 தொகை செலுத்தப்பட்டிருந்தது. செயற்பாடற்றுக் காணப்பட்ட இந்த நிறுவனத்தில் இந்தப் பெண் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்ட கடமைகள் அல்லது அவர் நிறைவேற்ற வேண்டிய பணிப்பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மேலும் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டமைக்கான தேவை என்னவென்பது கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.